MAY 2024

U/ID 33210/URT2A/ URL2A

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்து வினாக்களுக்கு 30 சொற்களில் விடை தருக.

1. சோழர் கால புலவர்களின் பெயர்களைக் கூறுக.

2. மூவருலாவில் 96 விழுப்புண்களை உடையவன் எனப் போற்றப்படும் சோழன் யார்?

3. பாண்டியர்களின் வீழ்ச்சிக்கானக் காரணம் யாது?

4. திருவரங்க கோயிலுக்கு பதினெண்நூறாயிரம் பொன்னைத் தானமாகக் கொடுத்த மன்னன் யார்?

5. மதுராவிஜயம் என்னும் நூலை இயற்றியவர் யார்?

6. முஸ்லீம் ஆதிக்கம் யாரால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது?

7. நாயக்கர் காலத்தில் காணப்பட்ட இருவகை வைணவ இயக்கங்கள் யாவை?

8. நாயக்கர் மன்னர்களில் தன்னுரிமை பெற்ற ஆட்சியாளர்கள் யாவர்?

9. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் எந்த ஆண்டு நடைபெற்றது?

10. பாளையக்காரர்களில் சிறப்புவாய்ந்த இரு மன்னர்களைக் கூறுக.

11. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

12. திரு.வி.க. எழுதிய நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் 200 சொற்களில் விடை எழுதுக.

13. சோழர்களின் ஓவியக் கலையை விளக்குக.

14. குலோத்துங்கச் சோழனின் போர்ச்சிறப்புகளைக் குறிப்பிடுக.

15. பிற்காலப் பாண்டியர்கள் பற்றிக் கருத்துகளைக் குறிப்பிடுக.

16. மராட்டியர் ஆட்சியில் ஏற்பட்ட விளைவுகளை விளக்குக.

17. பதிமூன்றாம் நூற்றாண்டில் இலக்கியம் பெற்றிருந்த செல்வாக்கை எழுதுக.

18. திருமலை நாயக்கரின் கலைத் தொண்டினை மதிப்பிடுக.

19. விடுதலை இயக்கத்தில் பாளையக்காரர்களின் பங்கினை எடுத்தியம்புக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு 500 சொற்களில் விடை தருக.

20. சோழர் காலச்சமுதாய நிலையைக் கட்டுரைக்க.

21. முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் போர்ச்சிறப்பை எடுத்துரைக்க.

22. தமிழகத்தில் முஸ்லீம் ஆதிக்கம் குறித்து விவரி.

23. திருமலை நாயக்கரின் போர்ச் சிறப்பினைக் கட்டுரைக்க.

24. இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கினைத் தொகுத்துரைக்க.

———————